திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த நிறுவனம் எவ்வளவு மூலதனத்தில் தொடங்க இருக்கிறது? ஒரு ஆண்டுக்கு எவ்வளவு டெலிவிஷன் செட்டுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சுமார் இருபது லட்சம் ரூபாய். சுமார் 10,000 டெலிவிஷன் செட்டுகள்.

Plantations in Tamil Nadu.

* 616 *Q.*—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of plantations and the extent of land therein under foreign control and foreign collaboration ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 23 தேயிலைத் தோட்டங்கள், 2 காப்பித் தோட்டங்கள், 3 ஏலத் தோட்டங்கள், 1 இரப்பர் தோட்டம். இவைகளின் மொத்தப் பரப்பு 9,518.28 ஹெக்டேர்கள்.

மாயூரத்திலுள்ள சிறுதொழில் பிரிவு

* 617 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரிலுள்ள தொழிற்சாலையில் தற்போது எந்தெந்தக் கருவிகள் செய்யப்படுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (1) கிடங்குகள், சர்க்கரை ஆலைகள், பள்ளிக்கட்டிடங்கள் முதலியவைகளுக்கான உருக்குக் கட்டுமானங்கள்.

(2) உருக்கு மற்றும் மரத்தாலான நீர்ப்பாசன மதகுக் கதவுகள்—திருகு மற்றும் நீள்தண்டு வகை.

(3) உருக்காலான மேல்நிலை நீர்த்தொட்டிகள்.

(4) உருக்கு புகைப் போக்கிகள், கம்பி வேலைப்பாடுகள் மற்றும் நுழைவாயில்கள்.

(5) மேற்கண்டவைகளுக்குச் செப்பனிடும் பணிகளையும் பழுதுபார்க்கும் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளல்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் 614-ம் எண்ணுள்ள வினாவின் மீது ஒரு துணைக் கேள்வி கேட்கும்போது, ரூரல் என்ஜினியரிங் சர்வே ஸ்கீமிற்கு மத்திய அரசிலிருந்து ஏதாவது உதவி கிடைக்குமா என்று கேட்டார்கள். அதற்கு தனிக் கேள்வி வேண்டும் என்று நான் விடையளித்தேன். என்னிடமுள்ள தகவல், முழு மானியமும் மத்திய அரசே தருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Supply of coal for Cement Industry

* 618 Q.—Thiru N. K. PALANISAMY:
Thiru R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether this Government have requested the Central Government to ensure regular supply of coal to the Cement Factories in this State; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) நிலக்கரி வழங்குதல் சம்மந்தமாகவும், நிலக்கரி இருப்பு வேகமாகக் குறைந்து வருவதாலும் சிமெட்டித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள பெரும் பிரச்சினை குறித்து 1973 ஜூலையில் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. இம்மாநிலத்திலுள்ள சிமெட்டித் தொழிலுக்குத் தேவையான நிலக்கரி வழங்க நடவடிக்கைகள் எடுக்குமாறு இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி: நமக்குத் தேவையான நிலக்கரி எவ்வளவு? எவ்வளவு நமக்கு ஒதுக்கப்படுகிறது? பற்றாக்குறை எவ்வளவு இருக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அகில இந்திய அளவில்தான் இது தீர்மானிக்கப்படுகிறது. நம் சிமெண்ட் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் நார்மல் கன்ஸம்ஷன் இவ்வளவு என்று இருக்கிறது. இதில் மத்திய அரசு நிலக்கரி ஒதுக்கும்போது சிமெண்ட் தொழிற்சாலைகளுக்காக தேவையான நிலக்கரியை ஒதுக்கவேண்டும். அதை எடுத்து இங்கே கொண்டுவரக்கூடிய டிரான்ஸ்போர்ட் பெஸிலிட்டீஸ் கொடுக்க